## டிசம்பர் – 01 – வெள்ளி

**புனித எலிஜியுஸ்**

**“விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் ஆனால் என் வார்த்தைகளோ ஒழிந்து போகமாட்டா” (லூாக்.21:33)**

### முதல் வாசகம் : தானியேல் 7 : 2 - 14

தானியேல் கூறியது: ”இரவில் நான் கண்ட காட்சியில் வானத்தின் நான்கு திசைக் காற்றுகளும் பெருங்கடலைக் கொந்தளிக்கச் செய்தன. அப்பொழுது நான்கு பெரிய விலங்குகள் கடலினின்று மேலெழும்பின. அவை வெவ்வேறு உருவம் கொண்டவை. அவற்றுள் முதலாவது கழுகின் இறக்கைகளை உடைய சிங்கத்தைப்போல் இருந்தது. நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அதன் இறக்கைகள் பிடுங்கப்பட்டன. அது தரையினின்று தூக்கப்பட்டு மனிதனைப்போல் இரண்டு கால்களில் நின்றது. அதற்கு மனித இதயமும் கொடுக்கப்பட்டது. அடுத்து, வேறொரு இரண்டாம் விலங்கைக் கண்டேன். கரடியைப் போன்ற அந்த விலங்கு பின்னங்கால்களை ஊன்றி எழுந்து நின்று தன் மூன்று விலா எலும்புகளைத் தன் வாயின் பற்களுக்கு இடையில் கவ்விக் கொண்டிருந்தது. ”எழுந்திரு, ஏராளமான இறைச்சியை விழுங்கு” என்று அதற்குச் சொல்லப்பட்டது. இன்னும் நோக்குகையில், வேங்கை போன்ற வேறோரு விலங்கு காணப்பட்டது. அதன் முதுகில் பறவையின் இறக்கைகள் நான்கு இருந்தன் அந்த விலங்குக்கு நான்கு இருந்தன. அதற்கும் ஆளும் உரிமை கொடுக்கப்பட்டது. இவற்றுக்குப் பிறகு, இரவின் காட்சியில் கண்ட நான்காம் விலங்கு, அஞ்சி நடுங்க வைக்கும் தோற்றமும் மிகுந்த வலிமையும் கொண்டதாய் இருந்தது. அதற்குப் பெரிய இரும்புப் பற்கள் இருந்தன. அது தூள் தூளாக நொறுக்கி விழுங்கியது. எஞ்சியதைக் கால்களால் மிதித்துப் போட்டது. இதற்குமுன் நான் கண்ட விலங்குகளுக்கு இது மாறுபட்டது. இதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தன. அந்தக் கொம்புகளை நான் கவனித்துப் பார்க்கையில், அவற்றின் நடுவில் வேறொரு சிறிய கொம்பு முளைத்தது. அதற்கு இடமளிக்கும் வகையில், முன்னைய கொம்புகளுள் மூன்று வேரோடு பிடுங்கப்பட்ட். அந்தக் கொம்பில் மனிதக் கண்களைப் போலக் கண்களும் பெருமை பேசும் வாயும் இருந்தன. நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அரியணைகள் அமைக்கப்பட்டன. தொன்மை வாய்ந்தவர் அங்கு அமர்ந்தார் அவருடைய ஆடை வெண்பனி போலவும், அவரது தலைமுடி தூய பஞ்சு போலவும் இருந்தன் அவருடைய அரியணை தீக்கொழுந்து களாயும் அதன் சக்கரங்கள் எரி நெருப்பாயும் இருந்தன. அவர் முன்னிலையிலிருந்து நெருப்பாலான ஓடை தோன்றிப் பாய்ந்தோடி வந்தது. பல்லாயிரம் பேர் அவருக்குப் பணிபுரிந்தார்கள். பலகோடி பேர் அவர்முன் நின்றார்கள் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க அமர்ந்தது நூல்கள் திறந்து வைக்கப்பட்டன. அந்தக் கொம்பு பேசின பெருமை மிக்க சொற்களை முன்னிட்டு நான் அதைக் கவனித்துப் பார்த்தேன். அப்படிப் பார்க்கையில், அந்த விலங்கு கொல்லப் பட்டது. அதன் உடல் சிதைக்கப்பட்டு நெருப்பிற்கு இரையாக்கப் பட்டது. மற்ற விலங்குகளிடமிருந்து அவற்றின் ஆட்சியுரிமை பறிக்கப்பட்டது. ஆயினும் அவற்றின் வாழ்நாள் குறிப்பிட்ட கால நேரம்வரை நீட்டிக்கப்பட்டது. இரவில் நான் கண்ட காட்சியாவது. வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார் இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர் வந்தார் அவர் திருமுன் கொண்டு வரப்பட்டார். ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்கு கொடுக்கப்பட்டன் எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும் அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும் அதற்கு முடிவே இராது. அவரது அரசு அழிந்து போகாது.

**பதில்பாடல் :** என்றென்றும் அவரைப் புகழ்ந்து பாடி ஏற்றிப் போற்றுங்கள்

### நற்செய்தி : லூக்கா 21 : 29 - 33

அக்காலத்தில் இயேசு அவர்களுக்கு மேலும் ஓர் உவமை சொன்னார் ”அத்தி மரத்தையும் வேறு எந்த மரத்தையும் பாருங்கள். அவை தளிர்விடும் போது அதைப் பார்க்கும் நீங்களே கோடைக்காலம் நெருங்கிவிட்டது என அறிந்து கொள்கிறீர்கள். அவ்வாறே இவை நிகழ்வதைக் காணும்போது இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அனைத்தும் நிகழும்வரை இத்தலைமுறை ஒழிந்து போகாது என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும். ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா” என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசுபிரானை தன்னகத்தே தாங்கப் பேறுபெற்ற மாதமாகிய இம்மார்கழி மாதத்தின் முதல் நாளில் கால்பதிக்கின்றோம். இன்றைய நாளுக்கான இறைவார்த்தைப் பகுதிகள் எம் ஒவ்வொருவருடையவும் ஈடுபாட்டான மாற்றத்தையே எதிர்பார்த்து நிற்கின்றது. இயற்கையின் ஒவ்வொரு அசைவுகளையும் கொண்டு காலத்தை நாம் கணிப்பதுபோல் இயேசு கூறிய அடையாளங்களிலிருந்து உலக முடிவும் இறையரசும் நெருங்கி உள்ளதை நாம் அறிந்துகொள்ள முடியும் என்பதை இன்றைய நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. இந்த இறுதிக்காலம் மனிதனின் வாழ்வு, சாவு, உயிர்த்தெழுதலின் வழியாக ஏற்கனவே தொடங்கிவிட்டது. தொடர்ந்தும் நாளாந்தம் நாம் பல அனுபவங்கள் வழியாக பல அறிகுறிகளையும், அழிவுகளையும் சந்தித்த வண்ணம் இருக்கின்றோம். உரிய காலத்தில் நிறைவேறும் இந்த இறைவாக்குகளை சாதாரணமாக எடுத்துவிடக்கூடாது. மாறாக அவற்றை சரியாகப் புரிந்துகொண்டு தயார் நிலையில் இருக்க வேண்டும். “விண்ணும் ம ண்ணும் ஒழிந்து போகும் ஆனால் என் வார்த்தைகளோ ஒழிந்து போகமாட்டா” (லூாக்.21:33) என்று உறுதியாகக் கூறுகின்றார். எனவே எமது வாழ்வில் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோமா? அவ்வாறாயின் நமது வாழ்வின் செயற்பாடுகள் அதன்படி அமைந்திருக்கின்றனவா? இறைமகன் எதிர்பார்த்திருக்கின்ற விழிப்பும், தயாரிப்பும் நம்மிடம் உள்ளதா? சற்று சிந்திப்போம்.